கூடுதல் மகிளா நீதிமன்றம் (நீதித்துறை நடுவர் நிலை),

திருவாரூர்.

**CC.No.105/2024**

2025-ம் ஆண்டு ஜனவரி மாதம் 08 -ம் நாள் குற்றமுறையீட்டாளர்/எதிரி தரப்பில் சாட்சி அ.சா.1 ன் சாட்சிய வாக்குமூலம் 1969-ம் சட்டத்தின்படி குற்றவியல் நீதித்துறை நடுவர் அவர்களால் ஆணையுறுதி செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | ஜோசப் ராஜ் | வயது | 40 |
| தந்தை பெயர் | ஜேசுராஜா | ஜாதி | |
| தொழில் | டிரைவர் | மதம் | |
| ஊர் | தென் ஓடாச்சேரி | தாலுக்கா | |

( எதிரி ஆஜரில் உள்ளார். எதிரி தரப்பில் வழக்கறிஞர் முன்னிலை)

**முதல் விசாரணை (அரசு தரப்பில்)**

நான் தற்போது தென் ஓடாச்சேரியில் வசித்து டிரைவராக வேலை பார்த்து வருதகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். கடந்த 28.12.2020 ம் தேதி காலை 09.00 மணியளவில் தென்ஓடாச்சேரி கானுார் ரோட்டில் உள்ள வாட்டர் டேங்கில் தண்ணீர் ஏற்றுவதற்காக சென்றேன். அப்போது அங்கு சிலர் அடித்தடி சண்டையில் ஈடுபட்டுக்கொண்டிருந்தனர். கூட்டத்தில் யாரோ என்னை அடித்து கீழே தள்ளிவிட்டனர். அப்போது ஆஜர் எதிரி அருகில் இருந்தார். சந்தேகத்தின் பேரில் ஆஜர் எதிரி மீது புகார் கொடுத்து விட்டேன். என்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். அதில் உள்ள விவரங்களை நான் எழுதவில்லை. (**புகாரில் உள்ள கையொப்பம் மட்டும் அசா.ஆ-1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**.)

**சாட்சி அரசு தரப்பு வழக்கை அனுசரிக்கவில்லை என்பதால் அரசு தரப்பு வேண்டுகோளிற்கிணங்க குறுக்கு விசாரணை செய்ய அனுமதி அளித்து அ.த.கு.வி.**

போலீசார் விசாரணையில் கடந்த 28.12.2020 ம் தேதி காலை 09.00 மணிக்கு ஆஜர் எதிரி கானுார் ரோட்டில் உள்ள வாட்டர் டேங்கில் நான் தண்ணீர் ஏற்றுவதற்காக சென்றபோது என்னை கத்தியை காட்டி மிரட்டி, சட்டை பையில் உள்ள பணத்தை எடு என்றும், கொன்று விடுவேன் என்று மிரட்டினார் என்றும் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. எதிரியோடு சமாதானம் ஆகிவிட்டதனால் எதிரிக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

**இல்லை.**

S CINTHA

Digitally signed by S CINTHA
DN: cn=S CINTHA, st=TAMIL NADU, c=+91
Date: 2025.01.08 16:08:05 +0530

நீதித்துறை நடுவர்,

கூடுதல் மகளிர் நீதிமன்றம்,

திருவாரூர்.

கூடுதல் மகிளா நீதிமன்றம் (நீதித்துறை நடுவர் நிலை),

திருவாரூர்.

**CC.No.105/2024**

2025-ம் ஆண்டு ஜனவரி மாதம் 08 -ம் நாள் குற்றமுறையீட்டாளர்/எதிரி தரப்பில் சாட்சி அ.சா. 2 ன் சாட்சிய வாக்குமூலம் 1969-ம் சட்டத்தின்படி குற்றவியல் நீதித்துறை நடுவர் அவர்களால் ஆணையுறுதி செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | அருள் ராஜ் | வயது | 32 |
| தந்தை பெயர் | ஆனந்தராஜ் | ஜாதி | |
| தொழில் | டிரைவர் | மதம் | |
| ஊர் | தென் ஓடாச்சேரி | தாலுக்கா | |

( எதிரி ஆஜரில் உள்ளார். எதிரி தரப்பில் வழக்கறிஞர் முன்னிலை)

**முதல் விசாரணை (அரசு தரப்பில்)**

நான் தற்போது தென் ஓடாச்சேரியில் வசித்து டிரைவராக வேலை பார்த்து வருதகிறேன். அசா.1 எனது மைத்துனர் ஆவார். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். கடந்த 28.12.2020 ம் தேதி மதியம் 12, 1 மணியளவில் தென்ஓடாச்சேரி கானூர் ரோட்டில் உள்ள வாட்டர் டேங்க் அருகே கூட்டமாக இருந்தது. வழக்கு சம்பந்தமாக வேறு எதுவும் தெரியாது. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**சாட்சி அரசு தரப்பு வழக்கை அனுசரிக்கவில்லை என்பதால் அரசு தரப்பு வேண்டுகோளிற்கிணங்க குறுக்கு விசாரணை செய்ய அனுமதி அளித்து அ.த.கு.வி.**

போலீசார் விசாரணையில் கடந்த 28.12.2020 ம் தேதி காலை 09.00 மணிக்கு ஆஜர் எதிரி கானூர் ரோட்டில் உள்ள வாட்டர் டேங்கில் அசா.1 தண்ணீர் ஏற்றுவதற்காக சென்றபோது அசா.1 ஐ கத்தியை காட்டி மிரட்டி, சட்டை பையில் உள்ள பணத்தை எடு என்றும், கொன்று விடுவேன் என்று மிரட்டினார் என்றும் மேற்படி சம்பவத்தை நான் நேரில் பார்த்தேன் என்றும் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. எதிரியோடு சமாதானம் ஆகிவிட்டதனால் எதிரிக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

**இல்லை.**

S CINTHA

Digitally signed by S CINTHA
DN: cn=S CINTHA, st=TAMIL NADU, c=+91
Date: 2025.01.08 16:08:11 +0530

நீதித்துறை நடுவர்,

கூடுதல் மகளிர் நீதிமன்றம்,

திருவாரூர்.

கூடுதல் மகிளா நீதிமன்றம் (நீதித்துறை நடுவர் நிலை),

திருவாரூர்.

**CC.No.105/2024**

2025-ம் ஆண்டு ஜனவரி மாதம் 08 -ம் நாள் குற்றமுறையீட்டாளர்/எதிரி தரப்பில் சாட்சி அ.சா. 3 ன் சாட்சிய வாக்குமூலம் 1969-ம் சட்டத்தின்படி குற்றவியல் நீதித்துறை நடுவர் அவர்களால் ஆணையுறுதி செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | மரிய ராஜ் | வயது | 67 |
| தந்தை பெயர் | செல்வராஜ் | ஜாதி | |
| தொழில் | விவசாயம் | மதம் | |
| ஊர் | தென் ஓடாச்சேரி | தாலுக்கா | |

( எதிரி ஆஜரில் உள்ளார். எதிரி தரப்பில் வழக்கறிஞர் முன்னிலை)

**முதல் விசாரணை (அரசு தரப்பில்)**

நான் தற்போது தென் ஓடாச்சேரியில் வசித்து விவசாயம் வேலை பார்த்து வருதகிறேன். அசா.1 எனக்கு தெரியும். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். அசா.1 க்கும், ஆஜர் எதிரிக்கும் என்ன பிரச்சனை என்று எனக்கு தெரியாது. இந்த வழக்கு சம்பந்தமாக வேறு எதுவும் தெரியாது. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**சாட்சி அரசு தரப்பு வழக்கை அனுசரிக்கவில்லை என்பதால் அரசு தரப்பு வேண்டுகோளிற்கிணங்க குறுக்கு விசாரணை செய்ய அனுமதி அளித்து அ.த.கு.வி.**

போலீசார் விசாரணையில் கடந்த 28.12.2020 ம் தேதி காலை 09.00 மணிக்கு ஆஜர் எதிரி கானூர் ரோட்டில் உள்ள வாட்டர் டேங்கில் அசா.1 தண்ணீர் ஏற்றுவதற்காக சென்றபோது அசா.1 ஐ கத்தியை காட்டி மிரட்டி, சட்டை பையில் உள்ள பணத்தை எடு என்றும், கொன்று விடுவேன் என்று மிரட்டினார் என்றும் மேற்படி சம்பவத்தை நான் நேரில் பார்த்தேன் என்றும் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. எதிரியோடு சமாதானம் ஆகிவிட்டதனால் எதிரிக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

**இல்லை.**

S CINTHA

Digitally signed by S CINTHA
DN: cn=S CINTHA, st=TAMIL NADU, c=+91
Date: 2025.01.08 16:08:17 +0530

நீதித்துறை நடுவர்,

கூடுதல் மகளிர் நீதிமன்றம்,

திருவாரூர்.

கூடுதல் மகிளா நீதிமன்றம் (நீதித்துறை நடுவர் நிலை),

திருவாரூர்.

**CC.No.105/2024**

2025-ம் ஆண்டு ஜனவரி மாதம் 08 -ம் நாள் குற்றமுறையீட்டாளர்/எதிரி தரப்பில் சாட்சி அ.சா. 4 ன் சாட்சிய வாக்குமூலம் 1969-ம் சட்டத்தின்படி குற்றவியல் நீதித்துறை நடுவர் அவர்களால் ஆணையுறுதி செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | ஆரோக்கியதாஸ் | வயது | 51 |
| தந்தை பெயர் | ஜெகன்நாதன் | ஜாதி | |
| தொழில் | விவசாயம் | மதம் | |
| ஊர் | தென் ஓடாச்சேரி | தாலுக்கா | |

( எதிரி ஆஜரில் உள்ளார். எதிரி தரப்பில் வழக்கறிஞர் முன்னிலை)

**முதல் விசாரணை (அரசு தரப்பில்)**

நான் தற்போது தென் ஓடாச்சேரியில் வசித்து விவசாயம் வேலை பார்த்து வருதகிறேன். அசா.1 எனக்கு தெரியும். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். அசா.1 க்கும், ஆஜர் எதிரிக்கும் என்ன பிரச்சனை என்று எனக்கு தெரியாது. என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள 1வது கையொப்பம் என்னுடையது தான். (**பார்வை மகசரில் உள்ள 1 வது கையொப்பம் மட்டும் அசா.ஆ. 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**) இந்த கையொப்பத்தினை ஏன் எதற்காக போட்டேன் என்று எனக்கு தெரியாது. போலீசார் கேட்டுக்கொண்டதனால் போட்டுக்கொடுத்தேன். இந்த வழக்கு சம்பந்தமாக வேறு எதுவும் தெரியாது. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**சாட்சி அரசு தரப்பு வழக்கை அனுசரிக்கவில்லை என்பதால் அரசு தரப்பு வேண்டுகோளிற்கிணங்க குறுக்கு விசாரணை செய்ய அனுமதி அளித்து அ.த.கு.வி.**

போலீசார் விசாரணையில் கடந்த 28.12.2020 ம் தேதி பகல் 12.30 மணியளவில் நானும், எடிசன் என்பவரும் கானூர் ரோட்டில் உள்ள வாட்டர் டேங்க் அருகே நின்று பேசிக்கொண்டிருந்த போது அங்கு வந்த வைப்பூர் காவல் நிலைய உதவி ஆய்வாளர் அவர்கள் அக்காவல் நிலைய குற்ற எண்.645/2020 சட்டப்பிரிவு 386, 506(2) இதச வழக்கின் சம்பவ இடத்தை பார்வையிட்டு என் முன்னிலையிலும், எடிசன் முன்னிலையிலும் பார்வை மகசர் மற்றும் வரைபடம் தயார் செய்தார்கள் என்றும், நானும், எடிசனும் சாட்சிகளாக கையொப்பம் செய்தோம் என்றும் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. எதிரிக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

**இல்லை.**

S CINTHA
Digitally signed by S CINTHA
DN: cn=S CINTHA, st=TAMIL NADU, c=+91
Date: 2025.01.08 16:08:22 +0530

நீதித்துறை நடுவர்,

கூடுதல் மகளிர் நீதிமன்றம்,

திருவாரூர்.